# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைகலாசார பீடம், புவியியற்றுறை
### இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு
### பொதுக்கலைமாணித் தேர்வு 2014/2015 (August 2018)

| | | |
|---|---|---|
| **GYS 2243** | புவியியல் சிந்தனைகள் மற்றும் முறையியல் **(Geographical Thoughts and Methodology)** | நேரம் **03** மணித்தியாலங்கள் |

- பகுதி–I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும் பகுதி–II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி- I

1) அ. கிரேக்க மற்றும் உரோம காலப் புவியியல் வளர்ச்சியில் பங்காற்றிய அறிஞர்கள் நால்வரின் பெயரினைக் குறிப்பிடுக

(4 புள்ளிகள்)

ஆ. கிரேக்க கால புவியியல் வளர்ச்சியில் தொலமியின் பங்களிப்பினை சுருக்கமாக குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

இ. தொலமியின் காலம் வரை உலக வரைபடத்தின் படிமுறையான வளர்ச்சியினை விளக்குக.

(12 புள்ளிகள்)

2) அ. புவியியல் வளர்ச்சியில் அரேபியர்களது பங்களிப்பு பிரதானமாக இடம் பெற்ற காலப் பகுதியினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ஆ. ஆரம்ப கால புவியியல் வளர்ச்சியில் அரேபியர்கள் பங்களிப்பினை மேற்கொள்வதற்கு சாதகமாக அமைந்த காரணிகளை விளக்குக.

(8 புள்ளிகள்)

இ. புவியியல் வளர்ச்சிக்கு அரேபியர்கள் ஆற்றிய பங்களிப்பினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

3) அ. இயற்கைப் பிராந்தியம் மற்றும் ஒற்றை அம்சப் பிராந்தியம் ஆகியவற்றை வரையறை செய்க.

(5 புள்ளிகள்)

ஆ. ஒற்றை அம்சப் பிராந்தியம் மற்றும் தொழிற்பாட்டு பிராந்தியம் ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்கள் தருக.

(5 புள்ளிகள்)

இ. இலங்கையில் இயற்கைப் பிராந்திய எண்ணக்கரு எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி- II

4) புவியியலில் பயன்படுத்தப்படும் பிரதான மாதிரிகளின் பண்புகளை சுருக்கமாக குறிப்பிடுவதுடன் அவை புவியியலில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
(20 புள்ளிகள்)

5) மானிட ஆதிக்க வாதம் சூழல் ஆதிக்க வாதம் ஆகிய எண்ணக் கருக்களை தற்கால உதாரணங்களுடன் விளக்கி, அவற்றின் எதிர்காலப் போக்குகளை ஆராய்க.
(20 புள்ளிகள்)

6) "புவியியல் கற்கையின் விருத்திக்கு தொலையுணர்வு தொழினுட்பம் முக்கிய பங்கு வகிக்கின்றது". இக் கூற்றினை வரலாற்று ரீதியாக ஆராய்க.
(20 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ. ஜெர்மன் கலைக்கூடம்

ஆ. படவரகலையில் நவீன தொழினுட்பம்

இ. ஐரோப்பிர் கால மறுமலர்ச்சியில் புவியியல்

(2 x10=20 புள்ளிகள்)